Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/27.9.2026/Script.

# வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர்—ரோஷ்னா காசிம்
தேதி 27.9.2026 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

தீவிரவாதத்திற்கு எதிரான பதிலடியே சர்ஜிக்கல் ஸ்டிரைக் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

தீவிரவாதத்திற்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க இந்தியாவிற்கு முழு உரிமை உண்டு என்று பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா என்பது வேலை வாய்ப்பு, உள்ளூர் பொருளாதாரம், ஒட்டு மொத்த வளர்ச்சி ஆகியவற்றிற்கு அடித்தளமாக திகழ்வதாக அத்துறைக்கான அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி குடிமைப் பொருள் வழங்கல் துறை சார்பில் நாளை தொடங்கி வரும் 30-ஆம் தேதி வரை 3 நாட்களுக்கு சேவா சேது சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

## மன் கி பாத்

பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளின் மறைவிடங்கள் மீது இந்திய ராணுவம் நடத்திய துல்லிய தாக்குதல் இந்தியாவின் பயங்கரவாத எதிர்ப்பு கொள்கையை உலகிற்கு நிரூபித்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார். அவர் இன்று ஆகாஷ்வானியில் மனதின் குரல் நிகழ்ச்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையில் சர்ஜிக்கல் ஸ்டிரைக் நடத்தப்பட்ட 10-ஆவது ஆண்டின் நிறைவை நாளை கொண்டாட இந்தியா

தயாராக உள்ளது என்றார். தீவிரவாதத்திற்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க இந்திய வீரர்கள் துணிச்சலுடன் கட்டுப்பாட்டுக் கோட்டை கடந்த விதம் கண்டு உலகமே வியந்தது என்று குறிப்பிட்டார். மேலும் பயங்கரவாத தாக்குதல்களால் நாம் நீண்டகாலமாக அனுபவித்து வந்த வலிக்கு நமது தீர்க்கமான பதிலடியே இந்த துல்லிய தாக்குதல் என்றும் பிரதமர் கூறினார். கடந்த 10 ஆண்டுகளில் பாலகோட் வான்வழி தாக்குதல் முதல் ஆபரேஷன் சிந்தூர் வரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் பயங்கரவாத தாக்குதல்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்ற செய்தியை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதாக குறிப்பிட்டார்.

25 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் உள்ள உலக வர்த்தக மையத்தில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல்களில் அமெரிக்கர்களுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் பாதிக்கப்பட்டவர்கள் இந்தியர்கள் என்பதையும் பிரதமர் தமது உரையில் சுட்டிக் காட்டினார். மேலும் 2014-ல் தாம் பிரதமரான பிறகு தமது அமெரிக்க பயணத்தின் போது அந்த அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தியதையும் திரு மோடி நினைவு கூர்ந்தார். பிரதமர் தமது 138-ஆவது மனதின் குரல் உரையில் கூறிய கூடுதல் தகவல்கள்................ (வாய்ஸ்)

தொடர்ந்து பிரதமர் தமது மனதின் குரல் உரையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து குறிப்பிடுகையில் இந்த பணியின் முதல் கட்டம் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் கிட்டதட்ட நிறைவடைந்து விட்டதாக கூறினார். 32 கோடிக்கும் அதிகமான குடும்பங்களின் தரவுகள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். லடாக், இமாச்சல பிரதேசம், ஜம்மு-காஷ்மீர் மற்றும் உத்தராகண்ட் ஆகிய தொலைதூர பனிமூடிய பகுதிகளிலும் தற்போது

மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் நடைபெற்று வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

குஜராத் மாநிலம் மோதாரா சூரிய கோவில் பலமுறை தாக்கப்பட்டதை சுட்டிக்காட்டிய பிரதமர் நாட்டின் முதல் சூரிய கிராமமாக மோதாரா தற்போது உருவெடுத்துள்ளதாக கூறினார். வரும் ஜனவரி மாதம் நடைபெற உள்ள மோதாரா நடன விழாவில் இந்திய கலாச்சாரம், மற்றும் பாரம்பரிய நடனங்கள் இடம் பெற உள்ளதாக கூறிய அவர் மக்கள் ஒருமுறையாவது மோதாராவின் பாரம்பரியத்தைக் கண்டு ரசிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

திருச்சி மாவட்டம் மணப்பாறை கல்லூரி பேராசிரியர் பல்வேறு இடங்களில் பழங்கால சிற்பங்கள், கோவில்களை கண்டறிந்ததாகவும் இது நாட்டின் பாரம்பரியத்தை புரிந்து கொள்ள உதவுவதாகவும் திரு மோடி பாராட்டினார்.

நாடு முழுவதும் உள்ள லட்ச கணக்கான இளைஞர்கள் போதை பொருட்களில் இருந்து விலகி இருக்கவும் இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உறுதி பூண்டுள்ளதாக கூறிய பிரதமர் 100 வார காலத்திற்கு நடைபெறும் போதையில்லா இளைஞர்களை உருவாக்கும் இயக்கத்தின் கீழ் உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

காந்திஜெயந்தி வரும் 2-ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில் காந்தியடிகளின் கொள்கைகளில் ஒன்றான தூய்மையைப் பேணுவதற்கான பல்வேறு முன்னெடுப்புகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாகவும் தூய்மையைப் பேணுவதே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலி என்றும் திரு மோடி குறிப்பிட்டார். பண்டிகை

காலங்களில் உள்ளூர் பொருட்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக் கொண்ட திரு நரேந்திர மோடி மக்கள் தங்களது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் பண்டிகைகளை மகிழ்ச்சியாக கொண்டாட வாழ்த்து தெரிவித்துள்ளார்.

## ராஜ்நாத் சிங்

தற்சார்பு மற்றும் எதிர்கால நோக்குடைய பாதுகாப்பு சூழலை உருவாக்கும் வகையில் இந்தியா முன்னேறி வருவதால் அடுத்த 10, 20 மற்றும் 25 ஆண்டுகளில் ஏற்படவிருக்கும் போரின் தன்மையை கருத்தில் கொண்டு தனது திறன்களை மேம்படுத்த முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறினார். அவர் இன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில், நாடு வெறும் தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்வதில் மட்டும் கவனம் செலுத்தாமல் பாதுகாப்பு தொழில் நுட்பங்களை மேம்படுத்தவும் பாடுபடவேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும் பயங்கரவாதத்தை கொள்கையாக கொண்டுள்ள அல்லது தீவிரவாதிகளுக்கு அடைக்கலமும் ஆதரவும் அளிக்கும் எந்த ஒரு நாட்டுடனும் பேச்சு வார்த்தைக்கு இடம் இல்லை என்று திரு ராஜ்நாத் சிங் தெளிவுபட கூறினார். தீவிரவாதத்திற்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க இந்தியாவிற்கு முழு உரிமை உண்டு என்றும் அவர் மேலும் தெரிவித்தார். நாட்டின் பாதுகாப்பு என்பது ஆயுதப் படைகளின் பொறுப்பு மட்டும் அல்ல அது ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பும் ஆகும் என்றும் குறிப்பிட்டார். மதம், ஜாதி, இனம், மொழி, பிராந்தியம், என்ற அடையாளங்களின் அடிப்படையிலான

பிரிவினைகளைக் கடந்து மக்கள் தேசிய நலனுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

## சேவா சங்கல்ப்

மக்கள் சேவை மூலமான தேச சேவை என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் சேவைப் பயணம், இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. சேவை மற்றும் நல்லாட்சி என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி-அனைவருக்கும் சமூக அதிகாரம் என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சேவா சங்கல்ப் அபியான் என்னும், இந்த சிறப்பு தொடரில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வை அடிப்படையிலான, ஒரு மாவட்டம், ஒரு பொருள் என்பது குறித்த ஒரு செய்தி தொகுப்பு....

(வாய்ஸ்)

இந்தியாவில் மாவட்ட பொருளாதாரங்கள் பெரும்பாலும் வேறுபாடு அற்றவையாகவே இருந்தன. உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கும் கைவினைப் பொருட்களுக்கும் வர்த்தக முத்திரை, சந்தை அணுகல்,

ஆகியவை இல்லாமல் இருந்தன. இதனால் கைவினைஞர்களின் வருமானமும் குறைவாகவே இருந்தது. ஒரு மாவட்டம், ஒரு பொருள் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாவட்டமும் துணி, பழம், கைவினைப் பொருள் அல்லது தானியம் என ஏற்கனவே சிறப்பாக செய்து வந்த ஒரு விஷயத்தை தேர்ந்தெடுத்தது. அந்த தயாரிப்புகளுக்கு அரசு வர்த்தக முத்திரை,புவிசார் குறியீடுகள், மின் வணிகம் மற்றும் ஏற்றுமதி உதவிகளை வழங்கியது. இதன் மூலம் பொருளாதார அடையாளம் இல்லாத மாவட்டங்கள் தனக்கென ஒரு அடையாளத்தை பெற்றன. கைவினைஞர்களும் விவசாயிகளும் உள்ளூர் சந்தைக்கு அப்பாற்பட்ட ஒரு சந்தையை வீட்டை விட்டு வெளியேறாமலேயே அடைய முடிந்தது. இதன் பயனாக ஒவ்வொரு மாவட்டமும் தனக்கென ஒரு பொருளாதார அடையாளத்தையும் சந்தை பாதையையும் பெற்று வளர்ச்சி கண்டு வருகிறது என்றால் அது மிகையில்லை.

## சுற்றுலா தினம்

உலக சுற்றுலா தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளை ஒட்டி, மத்திய சுற்றுலா துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் வாழ்த்து தெரிவித்துள்ளார். சுற்றுலா என்பது பல்வேறு இடங்களுக்கு பயணம் மேற்கொள்வது மட்டுமல்லாமல் வேலை வாய்ப்பு, உள்ளூர் பொருளாதாரம், ஒட்டு மொத்த வளர்ச்சி ஆகியவற்றிற்கு அடித்தளமாக திகழ்வதாக அமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் வளர்ந்த இந்தியாவை உருவாக்கும் நோக்கில் சுற்றுலாவை பொருளாதார

ஆற்றல் மையமாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தியாவை உலகின் முன்னணி சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு அனைவரும் உறுதி ஏற்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

செயற்கை நுண்ணறிவைக் கொண்டு சுற்றுலாவை மறுவடிவமைத்தல் என்ற கருத்தை மையமாகக் கொண்டு கொண்டாடப்படும். உலக சுற்றுலா தினம் புதுச்சேரி அரசு சார்பில் நேற்று தொடங்கி நாளை வரை கொண்டாடப்படுகிறது. பல்வேறு சுற்றுலா வல்லுனர்கள் பங்கு பெற்ற சுற்றுலா முன்னேற்றம், சாதனைகளை கொண்டாடுதல், சவால்களை எதிர்கொள்ளுதல் மற்றும் சேவைகளை இணைத்தல் என்ற தலைப்பில் கலந்தாய்வு இன்று நடைபெற்றது. மேலும் இக்கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நாளை புதுச்சேரி, தேங்காய்திட்டு, உப்பளம் மற்றும் கலை மற்றும் கைவினைக் கிராம பகுதியில் உள்ள மாங்ரு கடற்கரை தூய்மை பணிகளில் 300 தன்னார்வலர்கள் உள்ளடங்கிய குழுவினர் ஈடுபட உள்ளனர். முன்னதாக நேற்று பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு ஓவியப் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## குடிமைப் பொருள்

புதுச்சேரி குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை சார்பில் பொது மக்கள் நலன் கருதி நாளை தொடங்கி வரும் 30-ஆம் தேதி வரை 3 நாட்களுக்கு சேவா சேது சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன. இம்முகாமில் ரேஷன் அட்டை உறுப்பினர்களுக்கான e-KYC. ரேஷன் அட்டையுடன், மொபைல் எண்

இணைத்தல், மத்திய அரசின் பிரதான் மந்திரி கரீப்கல்யாண் அன்னயோஜனா திட்டத்தின் கீழ் தகுதி உடைய சிவப்பு அட்டை பயனாளிகளுக்கான டிஜிட்டல் கரன்சி பெறுவது உள்ளிட்ட அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் எளிதாகவும் விரைவாகவும் பெற்றுக் கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவரவர் ஆதார் அட்டையுடன் இணைக்கப்பட்ட மொபைல் எண்ணை பதிவு செய்வது அவசியம் என்பதால் பொது மக்கள் முகாமிற்கு வரும்போது ரேஷன், ஆதார் அட்டைகள் மற்றும் ஆதாருடன் இணைக்கப்பட்ட மொபைல் போன் ஆகியவற்றை கட்டாயம் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் பயனாளிகள் அனைவரும் இச்சிறப்பு முகாம்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு அத்துறையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கைலாஷ்நாதன்

புதுச்சேரியை அடுத்த வில்லியனூரில் ஒரு ரயில் முனையம் அமைக்க திட்டம் உருவாக்கப்பட்டு வருவதாகவும், அதற்கென 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய ரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்தார். அவர் இன்று புதுச்சேரி கேரள சமாஜம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில் புதுச்சேரியை மாஹே மற்றும் கேரளப் பகுதிகளோடு இணைக்கும் விமான சேவையும் பரிசீலனையில் உள்ளதாகவும் உடான் விமான சேவை திட்டத்தின் கீழ் கண்ணூர், கோழிக்கோடு மற்றும் கொச்சிக்கு விமான சேவை தொடங்கவும் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் கூறினார். மேலும்

புதுச்சேரி விமான நிலையத்தின் ஓடுபாதை 2 ஆயிரத்து 500 மீட்டராக அதிகரிக்கப்பட்டு பெரிய அளவிலான சர்வதேச விமான சேவை தொடங்கப்படும் என்றும் தெரிவித்தார். மத்திய அரசின் மருத்துவ காப்பீட்டு திட்டங்களின் கீழ் 70 வயதிற்கும் மேற்பட்ட முதியோர்களுக்கும் மருத்துவ காப்பீடு அதிகபட்சமாக 5 லட்சம் ரூபாய் வரை வழங்கப்படுவதாகவும் இந்த புதிய திட்டத்தின் பலன் அனைவரையும் சென்றடையும் விதமாக, பதிவு நடைமுறைகளில் கேரள சமாஜம் முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## விளையாட்டு

ஆசிய விளையாட்டு போட்டிகளில் வில்வித்தை பிரிவில் காம்பவுண்ட் மற்றும் ரிகர்வ் பிரிவுகளின் இந்திய ஆடவர், மகளிர் அணிகள் அரை இறுதிக்கு முன்னேறி உள்ளன. ஜப்பானில் நடைபெறும் இப்போட்டிகளில் இவ்விரு அணிகளும் வரும் 30-ஆம் தேதி நடைபெறும் அரைஇறுதிப் போட்டியில் தென்கொரியாவை எதிர்கொள்கின்றன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

தீவிரவாதத்திற்கு எதிரான பதிலடியே சர்ஜிக்கல் ஸ்டிரைக் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

தீவிரவாதத்திற்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க இந்தியாவிற்கு முழு உரிமை உண்டு என்று பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா என்பது வேலை வாய்ப்பு, உள்ளூர் பொருளாதாரம், ஒட்டு மொத்த வளர்ச்சி ஆகியவற்றிற்கு அடித்தளமாக திகழ்வதாக அத்துறைக்கான அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி குடிமைப் பொருள் வழங்கல் துறை சார்பில் நாளை தொடங்கி வரும் 30-ஆம் தேதி வரை 3 நாட்களுக்கு சேவா சேது சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/27.9.2026/Script.

---------------------------